**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 01.11.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மல்பெரி பழங்களிலிருந்து ஊட்டச்சத்துப்பொருட்கள் தயாரித்தலில் பண்ணை மற்றும் கிராமப்புற பெண்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பட்டுப்புழுவியல் துறையில் ஐந்து நாட்கள் பயிற்சியாக (27.10.2025 முதல் 31.10.2025) மல்பெரி பழங்களிலிருந்து ஊட்டச்சத்துப்பொருட்கள் தயாரித்தலில் பண்ணை மற்றும் கிராமப்புற பெண்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடத்தப்பட்டது. இந்த பயிற்சியில் ஜாம், ஸ்குவாஷ், தயார்நிலை பானம், மிட்டாய், பழத்தூள், ஊறுகாய் போன்ற பல்வேறு உயர் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பது குறித்து திறன்கள் பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட்டன. மல்பெரி பழ அடிப்படையிலான உணவுப் பொருட்கள் குறித்த பயிற்சி கையேடு பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திலுள்ள அறுவடை பின் சார் தொழில்நுட்ப மையத்தில் அமைந்துள்ள வணிக உணவு பதப்படுத்தும் மையம் மற்றும் வணிகமயமாக்கலுக்கான ABIS– தொழில் நுட்ப வணிக தயாரிப்பு மையம் ஆகியவற்றையும் பயனாளிகளுக்கு நன்மை பயக்கும் வகையில் சுற்றி காண்பிக்கப்பட்டது. இப்பயிற்சியின் நிறைவு 31.10.2025 அன்று மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உயர்திரு. நிகார் ரஞ்சன், இ.வ.ப, முதன்மையர் (வனவியல்) தலைமையில் நடைபெற்றது.

தனது சிறப்பு உரையில், பயனாளிகளுக்கு பழப் பொருட்களை ஊக்குவிப்பதன் மூலம் தொழில்முனைவோர் வளர்ச்சியில் பெண்களின் பங்கை அவர் எடுத்துரைத்தார். கூடுதல் வருமானம் ஈட்டுவதற்காக மல்பெரி பழப் பொருட்களின் உற்பத்தியை வணிக நிறுவனமாக எடுத்துக்கொள்வதில் பயனாளிகள் முன்வர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார் மற்றும் பயிற்சியை வெற்றிகரமாக முடித்ததற்கான சான்றிதழ்களை வழங்கினார்.

தலைமையுரையாற்றிய, பேராசிரியர் மற்றும் தலைவர் பட்டுப்புழுவியல் முனைவர்.கு.அ.முருகேஷ், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வணிக முயற்சியாக மல்பெரி பழப் பொருட்களை தயாரிப்பதன் மூலம் வருமானத்தை அதிகரிப்பதில் பெண்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். திட்டத்தின் முதன்மை ஆய்வாளர் முனைவர்.ப.பிரியதர்ஷினி பயிற்சி காலத்தில் பயனாளிகள் செய்த செயல்பாடுகளை விவரித்தார்.

பயிற்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக, பங்கேற்பாளர்கள் பயிற்சியின் முக்கியத்துவம் குறித்த தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர், இந்தப் பயிற்சி புது தில்லியில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சித் துறை (DSIR) நிதியளித்தது. அன்னூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த சுமார் 25 பயனாளிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர். திட்டத்தின் இணை முதன்மை ஆய்வாளர் முனைவர்.ஏ.தங்கமலர் மற்றும் செல்வி இரா.கௌசல்யா (JRF) ஆகியோர் பயிற்சித் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலா்**